பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No. 39

COMICS PDF TIMES

ஏகசக்ரத்தில் பாண்டவர்கள்

மகாபாரதம்: 10

AMAR CHITRA KATHA

11 KRISHNA
12 SHAKUNTALA
13 THE PANDAVA PRINCES
14 SAVITRI
15 RAMA
16 NALA DAMAYANTI
17 HARISCHANDRA
18 THE SONS OF RAMA
19 HANUMAN
20 MAHABHARATA
21 CHANAKYA
22 BUDDHA
23 SHIVAJI
24 RANA PRATAP
25 PRITHVIRAJ CHAUHAN
26 KARNA
27 KACHA
28 VIKRAMADITYA
29 SHIVA PARVATI
30 VASAVADATTA
31 SUDAMA
32 GURU GOBIND SINGH
33 HARSHA
34 BHEESHMA
35 ABHIMANYU
36 MIRABAI
37 ASHOKA
38 PRAHLAD
39 PANCHATANTRA I
40 TANAJI
41 CHHATRASAL
42 PARASHURAMA
43 BANDA BAHADUR
44 PADMINI
45 JATAKA TALES I
46 VALMIKI
47 GURU NANAK
48 TARABAI
49 RANJIT SINGH
50 RAM SHASTRI
51 RANI OF JHANSI
52 ULOOPI
53 BAJI RAO I
54 CHAND BIBI
55 KABIR
56 SHER SHAH
57 DRONA
58 SURYA
59 URVASHI
60 ADI SHANKARA
61 GHATOTKACHA
62 TULSIDAS
63 SUKANYA
64 DURGADAS
65 ANIRUDDHA
66 ZARATHUSHTRA
67 THE LORD OF LANKA
68 TUKARAM
69 AGASTYA
70 VASANTASENA
71 INDRA & SHACHI
72 DRAUPADI
73 SUBHADRA
74 AHILYABAI HOLKAR
75 TANSEN
76 SUNDARI
77 SUBHAS CHANDRA BOSE
78 SHRIDATTA
79 JATAKA TALES II
80 VISHWAMITRA
81 THE SYAMANTAKA GEM
82 MAHAVIRA
83 VIKRAMADITYA'S THRONE
84 BAPPA RAWAL
85 AYYAPPAN
86 ANANDA MATH
87 BIRBAL THE JUST
88 GANGA
89 GANESHA
90 CHAITANYA MAHAPRABHU
91 HITOPADESHA I
92 SAKSHI GOPAL
93 KANNAGI
94 NARSINH MEHTA
95 JASMA OF THE ODES
96 BHARAN KAUR
97 CHANDRAHASA
98 PUNDALIK & SAKHU
99 RAJ SINGH
100 PURUSHOTTAM DEV & PADMAVATI
101 VALI
102 NAGANANDA
103 MALAVIKA
104 RANI DURGAVATI
105 DASHARATHA
106 RANA SANGA
107 PRADYUMNA
108 VIDYASAGAR
109 TACHCHOLI OTHENAN
110 SULTANA RAZIA

Acquaint your children with their cultural heritage

111 SATI & SHIVA
112 KRISHNA & RUKMINI
113 RAJA BHOJA
114 GURU TEGH BAHADUR
115 PAREEKSHIT
116 KADAMBARI
117 DHRUVA & ASHTAVAKRA
118 KING KUSHA
119 RAJA RAJA CHOLA
120 DAYANANDA
121 VEER DHAVAL
122 ANCESTORS OF RAMA
123 EKANATH
124 SATWANT KAUR
125 UDAYANA
126 JATAKA TALES III
127 THE GITA
128 VEER HAMMIR
129 MALATI & MADHAVA
130 GARUDA
131 BIRBAL THE WISE
132 RANAK DEVI
133 MARYADA RAMA
134 BABUR
135 DEVI CHOUDHURANI
136 RABINDRANATH TAGORE
137 SOORDAS
138 PANCHATANTRA II
139 PRINCE HRITADHWAJA
140 HUMAYUN
141 PRABHAVATI
142 CHANDRA SHEKHAR AZAD
143 A BAG OF GOLD COINS
144 PURANDRA DASA
145 BHANUMATI
146 VIVEKANANDA
147 KRISHNA & JARASANDHA
148 NOOR JAHAN
149 ELEPHANTA
150 TALES OF NARADA
151 KRISHNADEVA RAYA
152 BIRBAL THE WITTY
153 MADHVACHARYA
154 CHANDRA GUPTA MAURYA
155 JNANESHWAR
156 BAGHA JATIN
157 MANONMANI
158 ANGULIMALA
159 THE TIGER AND THE WOODPECKER
160 TALES OF VISHNU
161 AMRAPALI
162 YAYATI
163 PANCHATANTRA III
164 TALES OF SHIVA
165 KING SHALIVAHANA
166 THE RANI OF KITTUR
167 KRISHNA & NARAKASURA
168 THE MAGIC GROVE
169 LACHIT BARPHUKAN
170 INDRA AND VRITRA
171 AMAR SINGH RATHOR
172 KRISHNA & THE FALSE VASUDEVA
173 KOCHUNNI
174 TALES OF YUDHISHTHIRA
175 HARI SINGH NALWA
176 TALES OF DURGA
177 KRISHNA AND SHISHUPALA
178 RAMAN OF TENALI
179 PAURAVA AND ALEXANDER
180 INDRA AND SHIBIRAJA
181 GURU HAR GOBIND
182 THE BATTLE FOR SRINAGAR
183 RANA KUMBHA
184 ARUNI AND UTTANKA
185 HITOPADESHA II
186 TIRUPPAN & KANAKADASA
187 TIPU SULTAN
188 DR AMBEDKAR
189 THUGSEN
190 KANNAPPA
191 THE KING IN A PARROT'S BODY
192 RANADHIRA
193 KAPALA KUNDALA
194 GOPAL & THE COWHERD
195 JATAKA TALES IV
196 HOTHAL
197 THE RAINBOW PRINCE
198 TALES OF ARJUNA
199 CHANDRALALAT
200 AKBAR

Available at
PAI & CO.
Ernakulam, Calicut, Madras, Trivandrum
And all other Leading Book Sellers

MAHABHARATA 10

© IBH Publishers Pvt. Ltd. 1980.

The Tamil Edition published by arrangement with IBH Publishers Pvt. Ltd., Mahalaxmi Chambers, 22, Bhulabhai Desai Road, Bombay-400 026.

Editor: **Anant Pai** *Script:* **Kamala Chandrakant & T. M. P. Nedungadi**

Art works: **Dilip Kadam**



V. M. R. BOOK SHOP
SOUTH CAR STREET
COMICS PDF TIMES

ஏக சக்ரத்துக்கு வந்து சேர்ந்த பிறகு, பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?
ஏகசக்ர நகரத்தில் அந்தணரின் வீட்டில், பாண்டவர்கள், ஞானிகளைப் போன்ற தோற்றத்தில், பிட்சை எடுத்து வாழ்ந்து வந்தார்கள். தங்கள் நல்லொழுக்கத்தால் அந்த நகர மக்களின் அன்புக்குப் பாத்திரமானார்கள்.
மாலையில் - பிட்சையில் பெற்றதைக் குந்தியிடம் கொடுப்பார்கள்.
அவரவர்களுக்கு உரிய பங்கைக் குந்தி வழங்குவாள்.

மொத்த வசூலில் பாதி பீமனுக்குக் கிடைக்கும் மீதியை மற்றவர் பங்கிட்டுக் கொள்வர்.
இம்முறையில் பாண்டவர்கள் அங்கு சிலகாலம் வாழ்ந்து வந்தார்கள்.
ஒரு நாள், எல்லோரும் பிட்சைக்கு வெளியே போயிருக்க, பீமன் மட்டும் குந்தியோடு வீட்டிலிருந்தான்.
அப்போது, வீட்டுக்குள்ளிருந்து வேதனைமிக்க அழுகுரலை குந்தி கேட்டாள்.
ஐய்-யோ-ஓ-



COMICS PDF TIMES

பிறகு அந்தணரின் வீட்டுக்குள் சென்ற குந்தி அவரும் அவர் மனைவியும் குழந்தைகள் சூழ தலைகுனிந்தபடி அமர்ந்திருப்பதைக் கண்டாள்.
அவர் கூறுவதைக் கேட்டாள்.
இவ்வுலக வாழ்க்கை போலியானது. அநித்ய மானது. வேதனையில் உருவாகி, துன்பமும் துயரமும் வழங்கக் கூடியது.
அடி பெண்ணே! நான் வேறு பத்திரமான இடத்துக்குப் போகலாம் என்று கூறினேன். நீ என் பேச்சைக் கேட்கவில்லை.
என் தந்தையைப் போலவே நானும் இங்கு பிறந்து வளர்ந்த-வன். என் சுற்றத்தாரை விட்டு வர மாட்டேன் என்று பிடிவாதமாக என் வேண்டுகோளை நிராகரித்தாய்.

இப்போது அழிவு நம் மீது வந்து விழுந்துள்ளது.
ஒரு வேளை இதுவே என் மரணமாக இருக்கலாம்.
இந்தத் துன்பத்திலிருந்து மீளக் கூடிய வழி ஏதும் தெரிய வில்லை.
அந்தணரின் வார்த்தைகளைக் கேட்ட அவர் மனைவி கூறினாள்.
நீங்கள் படித்தவர். மனிதர்களுக்கு மரணம் உண்டு என்பதையும் அறிவீர்கள். தவிர்க்க முடியாததை நினைத்து துக்கப் படுவதால் என்ன பயன்?
அங்கு நான் போகிறேன்.

COMICS PDF TIMES

அவர் கூறியதைக் கேட்ட அந்தணர் அவளை அணைத்துக்கொள்ள இருவரும் துக்கமுடன் அழுதனர்.
பெற்றோரின் அழுகையைக் கண்டு வேதனையுற்ற மகள் கூறினாள்.
ஆதரவின்றி கைவிடப்பட்டவர்கள் போல ஏன் அழுகிறீர்கள்? நான் சொல்வதைக் கேளுங்கள். எது நல்லதோ அதைச் செய்யுங்கள்.
என் தம்பி சின்னப் பையன். உங்கள் பாதுகாப்பு இல்லாமல் அவனால் வாழ முடியாது.
ஒருவனுக்கு கர்வத்தைத் தருவது மகன், துணையாக இருப்பவள் மனைவி. இக்குடும்பத்திலிருந்து உங்களை விடுவிக்க என்னைக் கடமை வழியில் செல்ல விடுங்கள்.

பிறகு அந்தணர் கூறினார்.
எனக்கு சௌக்கியத்தை-
யும் வாரிசையும் அதனைப்
கிடைக்கும் முக்தியையும்
தரத்தக்க குற்றமற்ற
என் மகளை நான்
எப்படி இழப்பேன்?
மகள் மறுமொழி பகன்றாள்.
என்றோ ஒரு நாள்
என்னைப் பிரியத்-
தான் போகிறீர்கள்.
அதை இப்போது
செய்யுங்களேன்.
மூவரும் குலுங்கி அழுதார்கள்.
அவர்கள் மகன் தன் மழலை மொழியில்
கூறினான்.
அழாதீர்கள்
அப்பா...
நீயும்
தான்
அம்மா...
அக்கா
நீயும்
அழாதே.


பிறகு ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து...
..குழந்தை கூறுவான்.
மனிதர்களை விழுங்கும் அந்த ராட்சதனை இதனால் கொல்லுவேன்.
அந்தத் துயரத்திலும் குழந்தையின் மழலைச் சொல் அவர்களைச் சந்தோஷப் படுத்தியது.
இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு குந்தி அவர்களை அணுகிக் கூறினாள்.
நான் உங்கள் துயரத்தின் காரண த்தையறிந்து, அதை எப்படித் தீர்க்கலாம் என்று முடிவு கட்ட விரும்புகிறேன்.


அந்தணர் பதிலளித்தார்.
தன்னலமற்ற தாயே! உன் போன்ற நல்லவர்களால் தான் இப்படிக் கூறமுடியும். ஆனால் எங்கள் துயரை மனிதர்களால் துடைக்க முடியாது.
நாங்கள் இதை அனுபவித்தேயாக வேண்டும். ஏனென்றால் மோசமான ஒரு அரசனின் ஆட்சியிலிருக்கிறோம் நாங்கள்.
எங்கள் மன்னர் வீரமற்ற கோழை அசடு - முட்டாள்...
.. மனிதர்களைத் தின்னும் பகன் என்னும் ராட்சதனே இந்நாட்டைப் பாதுகாத்து ஆண்டு வருகிறான்.

உயிர் வாழும் எந்த ஜீவனையும் விரோதி-களாயும் எங்களுக்-குப் பயமில்லை. ஆனால் –
.. அதற்கு வெகு மதியாக அவன் உணவுக்கு ஒரு வண்டி அன்னமும் இரண்டு எருமைகளையும்..
.. இவற்றைக் கொண்டு போகும் மனிதனையும் வசூலிக்கிறான்.
ஒவ்வொரு வீட்டாரும் முறை போட்டுக் கொண்டு இந்த உணவை அவனுக்கு அனுப்பு-கிறோம். மறுமுறை வர ஒருவருக்குப் பல வருஷங்களாகும்.

யாராவது தங்கள் முறை யிலிருந்து தப்ப முயன்றால் அவர்களைப் பெண்டு பிள்ளை களோடு கொன்று சாப்பிட்டு விடுவான் ராட்சதன்.
இப்போது என் முறை. எனக்காக ஒரு மனிதனை வாங்க என்னிடம் பணமில்லை. உயிராக நேசிக்கும் இவர்களைப் பிரியவும் மனமில்லை.

அவனிடமிருந்து தப்ப, ஒரு வழியும் தெரியவில்லை. என் குடும்பத்தோடு இன்று நான் அவனிடம் போக வேண்டும். எங்கள் எல்லாரையும் அவன் விழுங்கட்டும்.
குந்தி கூறினாள்.
சிறு குழந்தையான உங்கள் ஒரே மகனோ, கருணைமிக்க உங்கள் ஒரே மகளோ, நீங்களோ, உங்கள் மனைவியோ போவதை நான் விரும்பவில்லை.
எனக்கு ஐந்து மகன்கள். அவர்களில் ஒருவன் ராட்சதனுக்கு உணவாகப் போகட்டும்.
ஆனால், அந்தணர் அதற்கு இணங்காது கூறினார்.
இதற்கு. இணங்கி என் உயிரைக் காத்துக் கொள்ள மாட்டேன். அரக்கனும், நீசனும் கூட இதைச் செய்ய மாட்டான்.


குந்தி கூறினாள்.
அந்த அரக்கனால் என் மகனைக் கொல்ல முடியாது. மகாபலவான் – மாயசக்தி படைத்தவன். அவனைத் தாக்கிய பல ராட்சதர்கள் மாண்டதை நான் கண்டிருக்கிறேன்.
ஆனால் இதை யாரிடமும் கூறாதீர்கள். ஏனென்றால் அவன் வல்லமையைக் காணப் பலர் சூழ்ந்து கொள்ளுவார்கள்.
தன் குருவினுடைய அனுமதியின்றித் தன் திறமையை என் மகன் வெளிப்படுத்து- வானால்..
.. அவன் வல்லமை பயனற்றதாகிப் போகும்.
குந்தி இப்படிக் கூறவே அந்த அந்தணரும் அவர் மனைவியும் இணங்- கினார்கள். பிறகு குந்தியும் அவரும் பீமனிடம் அந்தக் காரியத்தைச் செய்யும்படி கூற, அவன் உடனே இணங்கினான்.

இவ்வேளையில் பாண்டவர்கள் அன்றைய பிட்சை-
யுடன் அங்கு வந்தார்கள்.
பீமனின் பார்வையிலிருந்து அவன்
ஏதோ ஒரு மகத்தான காரியத்தை
முடிக்கப் போவதைப் யுதிஷ்டிரர்
புரிந்து கொண்டார்.
தாயிடம் தனிமையில் கேட்டார்.
பீமன் என்ன காரியத்தை முடிக்கத் திட்டமிட்டிருக்-கிறான்?
அது உன் ஆணைப் படியா, அல்லது சொந்தமாகவா?
குந்தி அவரிடம் அந்தக் காரியத்தை விளக்கி, பின் கூறினாள்.
என்னுடைய ஆணைப்படிதான்- அந்த அந்தணருக்கும், இந்-நகருக்கும் நன்மையளிக்கும். இம் மகத்தான செயலை முடிக்கப் போகிறான்.

யுதிஷ்டிரன் கூறினான்
ஒருவர் தன் மகனைக் கைவிடுவதை அறிவுடையோர் அனுமதிப்பதில்லை.
பிறர் மகனுக்காக நீ உன் மகனைத் தியாகம் செய்வது வேதவாக்குக்கும் உலக வழக்குக்கும் மாறானது.
துன்பங்களினால் உன் அறிவு மழுங்கி விட்டதா? பகுத்தறிவு கரைந்து போயிற்றா? பீமனை இழக்க உன்னைத் தூண்டியது எது?
சகுனியும், துரியோதனாதியர்களும் உறக்கத்திலும் கூட யாருடைய ஆற்றலால் பீதியுறுகிறார்களோ...
.. யார் நம்மை அரக்கு மாளிகை நெருப்பிலிருந்து காப்பாற்றினானோ...
.. யாருடைய புஜ பலத்தினால் நாம் நிம்மதியாக உறங்க முடிகிறதோ, இழந்த ராஜ்யத்தை மீட்க யாருடைய வல்லமையை நம்பி இருக்கிறோமோ அவனை இழப்பதா?



குந்தி கூறினள்
பீமனைப் பற்றி நீ ஆதங்கப் பட வேண்டாம். என் முடிவும் விரக்தியால் ஏற்பட்டதல்ல.
தீப்பற்றி எரியும் அரக்கு மாளிகையிலிருந்து அவன் நம்மைக் காப்பாற்றியதும்; இடும்பனைக் கொன்றதும் பீமனின் பலத்தை மேலும் எனக்கு உறுதிப் படுத்தின.
பத்தாயிரம் யானைகளின் பலம் கொண்டவன் பீமன். வாரணவதத்திலிருந்து, ஒவ்வொரு யானை பலங் கொண்ட உங்களையெல்லாம் தூக்கி வந்தானே.
பல வருஷங்களுக்கு முன் என் மடியிலிருந்து தவறி விழுந்த போது, அந்தப் பாறை பொடி பொடியாயிற்று.

பீமனின் பலம் எவ்வளவு என்பதை நான் அறிவேன். அதனாலேயே இச்செயலை முடிக்க அவனைப் பணித்தேன். அசட்டையோ, ஆசையோ, அசட்டுத் தைரியமோ என் முடிவின் பின்னால் இல்லை. குற்றமற்ற என் முடிவு ஆழ்ந்த யோசனைக்குப் பிறகே உருவாயிற்று.


இச்செயல் இருவிதத் தகுதிகளைப் பெற்றுள்ளது. நாம் இங்கு தங்குவதற்கு அவ்வந்தணருக்கு ஏதாவது செய்யவேண்டும். புகழ்மிக்கதோர் காரியத்தைச் செய்யும் வாய்ப்பும் கிடைக்கிறது. துன்பத்திலுள்ளவர்களுக்கு க்ஷத்திரியன் உதவவேண்டும். அப்படிச் செய்வதனால் கீர்த்திமிக்க வம்சா வழிக்கும் மன்னர்களின் பாராட்டுதலுக்கும் உரியவனாகிறான்.

பிறகு யுதிஷ்டிரன் கூறினார்.
தாயே, தாங்கள் யோசித்து எடுத்த முடிவு சரியே. நிச்சயம் அந்த ராட்சசனை பீமன் கொன்று திரும்புவான்.


ஆனால் இதை நகர மக்கள் அறியாதபடிக்கு பாதுகாக்கும்படி அந்தணரிடம் கூற வேண்டும்.


இரவு கழிந்ததும், ராட்சதனுக்கான உணவு வண்டியை ஓட்டிக் கொண்டு அதிகாலையில் பீமன் கிளம்பினான்.
பாண்டு புத்திரர்களில் மாவீரனான பீமன் ராட்சதன் வசிக்கும் கானகத்தினுள் உணவைச் சுவைத்தவாறே புகுந்து...
..அரக்கனை அழைத்தான்.
பகா- ஓ, பகா! பகா..கா


பூதாகாரமான உடல், பலம், சிவந்த கண்கள், தலைமுடி, தாடி - பகாசுரனின் தோற்றம் பீதியூட்டுவதாக..
..அவன் வரவினால் பூமி அதிர்வடைய- தன் உணவை பீமன் சாப்பிடுவதைக் கண்டான்.

அடங்கா ஆத்திரமுடன் பகாசுரன் கூறினான்.
என் முன்னாலேயே என் உணவைச் சாப்பிடும் நீ யார்? யமனுலகுக்கு விரைவில் செல்லும் விருப்பமா உனக்கு?
இதைக் கேட்டு பீமன் வெறுமனே சிரித்தான்.
தொடர்ந்து சாப்பிடும் பீமனைக் கண்ட பகன்...
..பயங்கரமாக கர்ஜித்தான்...


..பிறகு இரு கைகளையும் உயர்த்தியபடி பீமனைக் கொல்ல ஓடி வந்தான். ஆனால் பீமன் சாவதானமாக பகாசுரனின் உணவை ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.
இதனால் ஆத்திரமடைந்த ராட்சதன் தன் முஷ்டியினால் பீமனின் முதுகில் ஓங்கிக் குத்தினான்.
ஆனால் பீமன் பெரிய ஏப்பம் விட்டபடி அவனைத் திரும்பியும் பார்க்காமல் தொடர்ந்து சாப்பிடலானான்.


கொதிப்படைந்த ராட்சதன் ஒரு மரத்தை வேரோடு பெயர்த்து...
..பீமன் மீது வீசினான். உண்டு முடித்திருந்த பீமன் உற்சாகத்தோடு போரிடத் தயாரானான்.
அவன் வீசிய மரத்தை விளையாட்டாக இடது கையால் பற்றி...

.. அதை அந்த ராட்சதன் மீதே வீசினான்.
இதன் பிறகு பகாசுரன் பல மரங்களைப் பிடுங்கி பீமனின் மீது வீசினான்.
. பீமனும் பல மரங்களைப் பெயர்த்து அவன் மீது வீச, பாண்டவ இளவரசனுக்கும் நரமாம்ச ராட்சதனுக்கும் பயங்கரமான போர் மூள- கானகத்து மரங்கள் ஏராளமாக நாசமாயின.


பிறகு பகன், பீமன் மீது பாய்ந்து பற்றினான். மாவீரன் பீமனும் அவனைப் பற்றி...
.. வேகமாகச் சுழற்றினான். பீமனும் பகாசுரனும் தங்கள் பலப்பரீட்சையை நிரூபிக்க முயன்றதில் பூமியே கிடுகிடுத்தது.
மனித மாம்சத்தை உண்ணும் பகாசுரன் களைப்படைய, பீமன் அவனைக் கீழே தள்ளி தன் முழங்கால்களால் அவனை அழுத்திக் கொண்டு...


அவன் கழுத்தை அமுக்கி..
.. தன் முழுபலத்தையும் காட்டி அவனை இரண்டாக முறித்தபோது பகன் பயங்கரமாக ஊளையிட்டு...
ஆ! ஆ! ஹூ! ஹா
.. செத்து விழுந்தான். பகனின் கூச்சலைக் கேட்டு அவன் உறவினர்கள் ஓடி வந்தார்கள்.



COMICS PDF TIMES

மறுநாள் காலை மக்கள், நகரின் நுழைவாயிலில் பகாசுரன் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதைக் கண்டார்கள்.


இதை அறிவிக்க ஊருக்குள்ளே ஓடினார்கள்.


ஆயிரக்கணக்கானோர் தங்கள் மனைவி மக்களுடன் இறந்து கிடக்கும் பகாசுரனைக் காண வந்தார்கள். அமானுஷிகமான அச்செயலைக் கண்டு பிரமித்தார்கள்.

கடவுளுக்குப் பிரார்த்தனை
கள் செய்த பின் முதல்
நாள் யாருடைய முறை
என்பதை உறுதிப்
படுத்திக் கொண்-
டார்கள்.
பிறகு அந்த அந்தணரின் வீடு நோக்கிச்
சென்று –
.. அவரை வினவினார்கள். நச்சரிக்கும் அவர்களிடம்
அவர் கூறினார்.
என் வீட்டாருடன் என் வதையை
எண்ணி அழுது கொண்டிருக்கும்
போது கனிவும், மாய சக்தியும்
கொண்ட ஒரு பிராம்மணன்
என்னிடம் வந்து: 'அக்கொடிய-
வனுக்கு உணவை இன்று
நான் கொண்டு செல்கிறேன்.
என்னைப் பற்றிய பயம்
வேண்டாம்' என்றார்.

காட்டுக்குள் உணவு வண்டியை ஓட்டிப்போனது அவர்தான். பொது நலமான இக் காரியத்தை அவர்தான் செய்திருக்க வேண்டும்.
பிறகு அவ்வூர் மக்கள், அளப்பரிய ஆனந்தத்தை அளித்த அந்த பிராம்மணனைப் பாராட்ட கோலாகலமாக விழாக் கொண்டாடினார்கள்.
பிறகு எல்லாரும் மன நிறைவோடும் மகிழ்வோடும் வீடு திரும்ப, பாண்டவர்களும் ஏகசக்ரத்தில் அந்த அந்தணரின் வீட்டில் தொடர்ந்து வசித்து வரலானார்கள்.
வியாசபாரதத்தின் பத்தாவது நாள் கதையை வைசம்பாயனர் இவ்வாறு கூற முடிவுற்றது.

செய்திகள் வாசிப்பது : பூந்தளிர் அமர் சித்திரக்கதை

★ மர்மமிகு யுரேனஸ் கிரகத்தை பற்றி பல புதுத் தகவல்களை பூமிக்கு தெரிவித்து விட்டு நெப்டியூன் கிரகத்தை நோக்கி வாயேஜர்–2 என்ற அமெரிக்க விண்கலத்தை ஓர் இயந்திர மனிதன் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

1989 ஆம் ஆண்டு ஆகஸ்டு 24ம் தேதி இந்த விண்கலம் நெப்டியூன் கிரகத்துக்கு பக்கமாக செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ புற்று நோயை எதிர்த்து நிற்கும் சக்தி தேனுக்கு உள்ளது என்று ஒரு ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்திருக்கிறது. இந்தக் கண்டுபிடிப்பை, லூதியானாவில் உள்ள, பஞ்சாப் விவசாயப் பல்கலைக்கழகம் செய்திருக்கிறது. தேன் சேகரிப்பவர்களைப் புற்று நோய் அதிகமாக தாக்குவதில்லை என்று கூறப்படுகிறது.

★ ஆங்கிலம் பேசுவதையும், பேச முயற்சிப்பதையும் சீனர்கள் இப்போது ஒரு வெறி பிடித்த ஆர்வத்துடன் செயல்படுத்துகிறார்கள். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், 3 வருட ஆங்கில வகுப்புக்கு விண்ணப்பித்துள்ளனர். ஆங்காங்கே, முற்சந்தியிலும், நாற்சந்தியிலும் ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாகவும் பொழுது போக்காகவும் கருதுகின்றனர் சீனர்கள். ஆங்கிலம் கற்றுத்தருபவர்களை பலர், விரைவில் நண்பர்களாக்கிக் கொள்ளுகின்றனர்.

★ வாஷிங்டனிலிருந்து ஜப்பானில் உள்ள டோக்கியோவிற்கு விமானத்தில் செல்ல 14 மணி நேரம் செலவாகிறது. இதை 2 மணி நேரமாகக் குறைக்க விண்வெளியில் செல்லும் பயணிகள் விமானம் ஒன்றினை அமெரிக்கா தயாரிக்கும். இதனுடைய சோதனை ஓட்டம் 1990 ஆம் ஆண்டு நடத்தப்படும். இந்த விமானத்தை தயாரிக்க 2,000 கோடி ரூபாய்க்கும் மேல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ ரயில் பிரயாணத்துக்கான டிக்கெட்டுகளை முன் கூட்டியே பதிவு செய்வதற்கு டில்லியில் கம்யூட்டர் முறையை அமல்படுத்தி முறைகேடுகளைத் தவிர்க்க ஏற்பாடாகியுள்ளது. இதையடுத்து மற்ற பெரிய நகரங்களிலும் கம்யூட்டர் முறை புகுத்தப்பட உள்ளது. மேலும் பெரும்பாலான ரயில் விபத்துகள் மனிதனுடைய அஜாக்கிரதையினால் ஏற்படுவதால், 'எந்திரமயமாக்குதல்' என்ற திட்டப்படி ரயில்வேயில் அதிகமாக இயந்திரம் நிறுவப்படும் என்று தெரிகிறது.

★ வேலை வாய்ப்பு அலுவலகத்தில் அன்னபாக்கியம் என்ற பெண் பெயரை 16 வருடங்களுக்கு முன்பு, பதிவு செய்தும் இது வரைக்கும் ஒரு நேர்முகத் தேர்வுக்கோ வேலைக்கோ அழைப்பு வரவில்லை. இதை அடிப்படையாகக் கொண்டு தனக்கு வயது வரம்பு தளர்த்தப்பட வேண்டும் என்று உயர் நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனுவை தாக்கல் செய்திருக்கிறார் அன்னபாக்கியம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
... PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND

அடுத்த

பூந்தளிர் அமர் சித்திரக் கதை

வரிசையில்

மே
25ந்தேதி
வெளி
வருகிறது

சாணக்கியர்

Regd. No: R N 36195/84 **Poontalir** TN/MS (c) 744

1986 April 10 **AMAR CHITRA KATHA** Price : Rs. 1.50